(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் ஒய்வு பெற்ற காவல்துறை துணை கண்காணிப்பாளர் என்றால் சரிதான். 1,2 வாதிகளை நான் இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட வா.சா.ஆ1 அடிப்படையிலான அறக்கட்டளையின் தலைவர் மற்றும் செயலாளர் என குறிப்பிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அறக்கட்டளையின் செயலாளர் ஆவேன். வா.சா.ஆ1ன்படி எங்களது டிரஸ்ட் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது டிரஸ்ட் முறையாக செயல்பட்டு வருகிறதா என்றால் முறையாக செயல்பட்டு வருகிறது. டிரஸ்ட் நிர்வாகத்தில் இருந்து இந்த வழக்கு தாக்கல் செய்ய தீர்மானம் போடப்பட்டுள்ளதா என்றால் போடப்பட்டுள்ளது. அந்த தீர்மானத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களது டிரஸ்டில் தீர்மானம் பேரேட்டில் முறையாக எழுதி வரப்படுகிறதா என்றால் எழுதிவரப்படுகிறது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எங்களது டிரஸ்டில் எந்த தேதியில் தீர்மானம் போடப்பட்டது அதன் எண் என்னவென்றால் பேரேட்டை பார்த்தால் தான் தெரியும். வழக்கு போடுவதற்கு முன்பு எவ்வளவு நாட்களுக்கு முன்பு தீர்மானம் போடப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு போடுவதற்கு முன்பு தீர்மானம் போட்டு பேரேட்டில் எழுதி உள்ளது. அந்த தீர்மானத்தை தாக்கல் செய்யாமல் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டபடி நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 டிரஸ்ட் ஆவணமானது 19.3.2019ம் தேதி உருவாக்கப்பட்டது. வழக்கு சொத்தை டிரஸ்ட் பெயரில் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ5ன்படியான நன்கொடை ஆவண சொத்தினை வா.சா.ஆ1 டிரஸ்டில் காட்டவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ5ல் கண்ட சொத்தை தான் பிராது சொத்தாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நாளது தேதிவரை வா.சா.ஆ5 ஆவணத்தில் கண்ட சொத்தினை டிரஸ்டிற்குண்டான சொத்தாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ5ல் கண்ட ஆவணத்தில் 3ம் வாதி ராஜேந்திரன் ஒரு தரப்பினராக உள்ளாரா என்றால் இல்லை. வா.சா.ஆ5 நன்கொடை ஆவணத்தை எழுதி வாங்கிய நபருக்கு

தான் அந்த சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ5ல் எழுதிய வாங்கிய நபர்கள் யாரும் இந்த வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் விளம்புகை மற்றும் தடையாணை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு எவ்வகையில் பாத்தியம் என்றால் வழக்கு சொத்திற்கு கோவில் பெயரில் பட்டா உண்டு. வில்லங்க சான்றிதழில் ராஜா ராஜாத்தியம்மன் கோவில் என்றுஇடம் பெற்றுள்ளது. வில்லங்க சான்றிதழில் துலங்குவதாக நான் கூறுவது வா.சா.ஆ5 ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ5ஐ எழுதிகொடுத்தவர் பெயர் ஜெகநாதன் என்றால் சரிதான். ஜெகநாதன் என்பவருக்கு வா.சா.ஆ5ல் கண்ட சொத்து எப்படி பாத்தியப்பட்டது என வா.சா.ஆ5ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ5ல் கண்ட வழக்கு சொத்து ஏ.ஆர்.எஸ்.சுப்பையா முதலியார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு பிறகு அவரது வாரிசான ராமலிங்கம் என்பவருக்கு பாத்தியப்பட்டது. ராமலிங்கம் 1ம்வாதியாகவும், இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து தென்காசி கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.541/2009 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு சொத்து மேற்படி வழக்கின் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், வா.சா.ஆ5 நன்கொடை ஆவணம் அடிமுதலே செல்லாத ஆவணம் என்றும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ5 ஆவணத்தில் காணப்பட்டுள்ள நன்கொடை எழுதிக்கொடுத்த, நன்கொடை எழுதி பெற்ற நபர்களுக்கு எதிராக மேற்படி வழக்கில் வாதிகள் கோரியபடி கடந்த 6.7.15ம் தேதியில் தீர்ப்புடன் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கில் 77 செண்டிற்கு தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கின் பிரதிவாதியில் ஒருவர் அது ஒருதலைபட்ச தீர்ப்பு என்றும் அதை ரத்து செய்ய வேண்டி 5 ஆண்டுகள் கழித்து மனு தாக்கல் செய்திருந்தார் என்றாலும் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் மீது மனுதாரர் தரப்பில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சீராய்வ்வு மனு செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது அதனை எதிர்த்து எதிர்மனுதாரரான இந்தவழக்கு பிரதிவாதி தரப்பில் உச்சநீதிமன்றத்தில் சிறப்பு மேல்முறையீடு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டு உயர்நீதிமன்ற உத்தரவு ரத்து

செய்யப்பட்டு உயர்நீதிமன்றத்திற்கு மீள அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அங்கு அந்த மனு விசாரிக்கப்பட்டு அந்த விசாரணையின் இறுதியில் சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேலும் மேற்படி உத்தரவில் வழக்கு சொத்தில் பரப்பளவில்உள்ள வித்திசாயத்தை பொறுத்து கிழமை நீதிமன்றத்தில் மனு செய்து பரிகாரம் தேடிகொள்ளுமாறு விளக்கம் கூறப்பட்டுள்ளது. பவர் ஏஜெண்ட் மாடசாமி என்பவரால் கிழமை நீதிமன்றத்தில் நீதிமன்ற தீர்ப்பாணையில் திருத்தம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு நாளது தேதிவரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இதுநாள் வரை உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. நான் கூறுகின்ற விபரப்படி பார்த்தாலும் உபரியாக கூறுகின்ற சொத்தானது ஏ.ஆர்.எஸ்.ராமலிங்க முதலியாரின் வாரிசகளுக்குரியது என்றால் சரிதான். இந்த வழக்கில் மேற்படி ஏ.ஆர்.எஸ்.ராமலிங்க முதலியாரின் வாரிசகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.541/2009 வழக்கு தீர்ப்பாணை நாளது தேதி வரை நடைமுறையில் உள்ளது என்றாலும் அதன் அடிப்படையில் இந்த வழக்கு முன்தீர்ப்பு அடிப்படையில் பாதிப்பு அடைந்துள்ளது என்றாலும் சரியல்ல. கோவிலை எத்தனை வருடமாக நடத்தி வருவதாக சொல்லுகிறேன் என்றால் 50ஆண்டுகளாக இடத்து உரிமையாளரின் அனுமதியுடன் நடத்தி வருகிறேன். இடத்தின் உரிமையாளரான ஏ.ஆர்.எஸ்.ராமலிங்கம், ஏ.ஆர்.எஸ்.சுப்பையா வகையறாக்களிடம் இருந்து அனுமதி பெற்றதாக கூறுவதை காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரிதான். நீண்ட காலமாக சொத்தை அனுபவம் செய்து வருவதால் எதிரிடை பாத்திய பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் அனுபவத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேன். ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோரவில்லை என்றால் சரிதான். வா,.சா.ஆ5 ஆவணத்திற்கு முன்னிட்டு வழக்கு சொத்தை அனுபவம் செய்ததாக காட்டக்கூடிய ஆவணங்கள்தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ5 அடிப்படையில் தான் அதற்கு பின்னிட்டு பட்டா மற்றும் வில்லங்க சான்று பதிவு ஏற்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிராதில் கண்டுள்ள தபசில் சொத்தின் நான்கு மால்களின் எல்கை விபரம் சரிதானா என்றால் சரியல்ல. சரியில்லாமல் உள்ளது. மேற்கு பக்க எல்கை தவறாக உள்ளது. அதில் ஒரு பகுதி தான் குறிப்பிட வேண்டும்.

மற்ற 3 எல்கை மால்களும் சரியானது தான். வழக்கு சொத்திற்கு வடக்குபக்கம் கிழமேலாக பிரதிவாதி 13அடிஉயரத்தில் சுவர் கட்டி அடைத்துள்ளார் என்றால் சரிதான். கிழக்குபக்கம் அருணாசலநாயக்கரின் வீட்டின் மேலசுவரை தென்வடலாக கட்டியுள்ளார் என்றால் சரிதான். அருணாசலநாயக்கரின் வீட்டு சுவரும், பிரதிவாதி கட்டிய சுவரும் வடபக்கத்தில் ஒன்றாக இணைத்து கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் மேற்குபக்கமாக இருந்து கிழக்கு நோக்கி வழக்கு சொத்திற்கு சென்றுவருகிறோம். மேற்குபக்கம் தென்வடலாக ராஜ் என்பவர் அவரது தோட்டத்தை பாதுகாக்க வேண்டி கல்தூண் நட்டி முள்வேலி அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. ஏ.ஆர்.எஸ்.ராமலிங்க முதலியார் வாரிசுகளிடமிருந்து 13 செண்ட் இடத்தினை பதிவு செய்ய கிரைய ஒப்பந்தம் டிரஸ்ட் பெயரில் எழுதி வாங்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை சார்பதிவாளர் பதிவு செய்ய முடியாது என மறுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தை முறையாக பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்று சார்பதிவாளர் மற்றும் பிரதிவாதி வகையறா மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபேரனை மனுதாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்..

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)